# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No. 237/2024

dated : 27.01.2026

P.W. 2

Name ராமசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1, 2 பிரதிவாதிகள் பிராது தபசில் சொத்தை கிரையம் கொடுக்க வேண்டி என்னிடம் எப்போது கேட்டார்கள் என்றால் கிரையம் கொடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னே கேட்டார்கள் தேதி ஞாபகமில்லை. பிராது தபசில் சொத்துக்கள் குணராமநல்லூரில் உள்ளது பின்னர் சாட்சி மத்தளம்பாறை கிராமத்தில் இருப்பதாக கூறுகிறார். சொத்தின் விஸ்தீரனம் 78 செண்ட் ஆகும். ZOHO நிறுவனம் மத்தளம்பாறையில் உள்ளது என்றால் சரிதான் வழக்குரைச் சொத்து மத்தளம்பாறைக்கு வடக்கேயுள்ளது. வழக்குரைச் சொத்து தென்காசி-அம்பாசமுத்திரம் சாலையின் முகப்பில் உள்ளது. அதன் மதிப்பு ஒரு செண்ட்டிற்கு சுமார் 1 1/2 லட்சம் என்றால் சரியல்ல ரூ.80,000/-ற்கு போகும். ஒரு செண்டிற்கு ரூ.63,000/-க்கு பேசி ரூ. 6 லட்சம் முன்பணமாக கொடுத்தோம். 100/-ரூபாய் முத்திரைத்தாளில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. வாதி முத்திரைத்தாளை வாங்கி வந்தார். அவர் பெயரில்தான் முத்திரைத்தாள் வாங்கி வந்துள்ளார். சொத்தை

விற்றவர் குடும்பத்தின் இளைய மகளின் கணவர் கூறிய தகவலின் அடிப்படையில் சொத்து விபரம் எழுதப்பட்டது. அவர் சொன்னதை டைப் மிஷினில் அடித்தார்கள். நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் போட்டேன். சொத்துவிபரம் சொன்னவர் 2 வது சாட்சியாக கையெழுத்துப்போட்டார். கையெழுத்துப்போட்ட பின்னர் தந்தை பெயர் முகவரி எழுதிக் கொண்டோம். 2 வதாக சாட்சி கையெழுத்துப்போட்டவர் அவ்வாறு எழுதினாரா என்றால் கையெழுத்துப்போட்டது மட்டும் ஞாபகமுள்ளது மற்ற விவரம் தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அவர்களது தந்தை மூலம் சொத்துக்கள் பாத்தியப்பட்டது. அவர் பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் அதன்படி பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ளது. நான் மேற்படி ஆவணங்களை பார்த்துள்ளேன். அந்த ஆவணங்களை வாங்கி வாதியிடம் கொடுத்து அதன்பின்னரே ஒப்பந்தம் செய்து கொண்டோம். 1, 2 பிரதிவாதிகள் வாதியிடம் ரூ.20 லட்சம் கடன் பெற்றுக் கொண்டார்கள் என்றும்அவ்வாறு கடன் பெற்றுக் கொண்டதற்கு ஆதரவாக கடன் கொடுத்தபோது வாதி கடனுக்கு ஆதரவாக வெற்றுத்தாள்களிலும், பூர்த்திசெய்யப்படாத முத்திரைத்தாள்களிலும் கையொப்பம் பெற்றுக்கொண்டார் என்றும் சொன்னால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் 4 ம் பிரதிவாதிக்கு சொத்தை கிரையம் கொடுத்த பின்னர் அது பற்றி தெரியவந்த வாதி தான் கொடுத்த கடனிற்கு கூடுதலாக வட்டி செலுத்த வேண்டுமென்று கேட்டு வந்தார் என்றும் ஞாயப்படியான வட்டி செலுத்த முன்வந்த 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள மறுத்து ஆவணங்களை உற்பத்தி செய்து இவ்வழக்கை தாக்கல்

செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கும் எனக்கும் குடும்ப பகை உண்டு என்றால் சரியல்ல. அதனால் வாதி தயாரித்த ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதற்கேற்ப பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மொத்தம் 25 லட்சம் கிரைய முன்பணத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொருமுறை பணம் கொடுக்கும்போதும் நான் சாட்சியாக கையெழுத்திட்டுள்ளேனா என்றால் ஓரிரு முறை சாட்சியாக கையெழுத்திட்டுள்ளேன். எந்த தேதியில் ஒப்பந்தப்படி கிரையம் எழுதிக் கொடுக்க வேண்டுமென்று பிரதிவாதிகளிடம் கேட்டேன் என ஞாபகமில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டாக 4 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள். கிரைய முன்பணத் தொகை பெறுவதற்கு 1, 2 பிரதிவாதிகள் மட்டும்தான் வந்தார்கள் 3 ம் பிரதிவாதி வரவில்லை. கிரையம் ஒப்பந்தம் செய்தததாக கூறப்படும் காலத்தில் மேற்படி சொத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் எனவே 1, 2 பிரதிவாதிகளிடம் ஒப்பந்த தேதியில் நாங்கள் பணம் கொடுத்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதிதான் தற்போது சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான் பின்னர் யார் அனுபவித்து வருகிறார்கள் என்று தெரியாது என்று சாட்சி கூறுகிறார். 4 ம் பிரதிவாதி ஞாயமாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். கிரையம் கொடுக்கும்போது 1, 2 பிரதிவாதிகள் கிரையம் செய்து கொடுக்கக்கூடாது என்று கூறவில்லை ஏனென்று தெரியாது. 2 ம் பிரதிவாதியின் கணவரிடம்தான் கேட்டோம். நாங்கள் போய் கேட்டதாக

கூறியது பொய் என்றால் சரியல்ல. அதனை முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிமை ஏதும் இல்லாத நிலையில் வழக்குரைச் சொத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியாது என்றும் போலியான ஆவணங்களை உற்பத்தி செய்து அதற்கேற்ப சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.01.27 17:46:06 +0530